13th February 1959]

SRI K. B. S. MANI : தற்கால உத்தரவுப்படி சிறிய மேக்கர் போன்ற சாமான்கள் உபயோகப்படுத்த வேண்டுமென்று வைத்து இருந்தும் அவைகளுக்கும் லைசென்ஸ் வழங்கப்படும் என்ற உத்தரவும் போடப்பட்டிருக்கிறது. அதனால் மேக்கர் போன்ற டெஸ்ட்பண்ணக்கூடிய சாமான்களும் கிடைப்பது இல்லை. அவைகளை இங்கேயே தயாரிக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அவைகள் சுலபமாகக் கிடைப்பதற்கும் வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தேவைப்படுகிற சாமான்களை உற்பத்திசெய்வதற்கு முதலாளிகள் அக்கறை கொள்ளுவார்கள். லாபம் அதிகமாக வரும் என்று வருவதினால் அவர்களே உற்பத்தி செய்ய முன் வருவார்கள். ஏதாவது சாமான்கள் வேண்டியதாக இருந்தால் அவைகளை உற்பத்தி செய்ய அவர்களே முன் வருவார்கள். தனியார் துறையில் சர்க்கார் என்ன உதவிசெய்ய வேண்டுமென்று கருதுகிறார்களோ அதைச் செய்யும்.

SRI M. P. SUBRAMANIAM : மின்சார விஸ்தரிப்புத் திட்டம் இப்பொழுது பரவலாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் நேரத்தில் ஸ்டாட்டர்கள், சுவிச்சுகள் போன்ற சாமான்களை ஒன்றுக்கு ஒன்றரை பங்கு கூடுதலாகக் கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இங்கே செய்யப்படும் சாமான்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தால், மேலும் வெளிநாடுகளிலிருந்து போதிய அளவு இறக்குமதி செய்வது இல்லாத காரணத்தால் இந்த சாமான்கள் ப்ளாக் மார்க்கெட்டில் விற்கப்படுகின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே இவைகளை போதுமான அளவுக்கு இங்கேயே உற்பத்தி செய்ய தனியார் துறையில் விடுவதற்கு அரசாங்கத்தினிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : தனியார் துறையில் ஏதாவது திட்டம் ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் கருதினால் சர்க்கார் நிச்சயமாக அதைச் செய்யும்.

Planting trees on road sides

* 287 *Q*.—SRI V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent for planting trees on road sides by the Highways Department, Pudukkottai Division in the Tiruchirappalli district for the years 1957 and 1958?

THE HON. SRI P. KAKKAN : The expenditure on planting avenue trees on Government roads was Rs. 27,813 in 1957 and Rs. 21,306 in 1958 and that on District Board roads was Rs. 13,594 in 1957 and Rs. 11,410 in 1958.

Community Development Scheme

* 288 *Q* —SRI V. K. KOTHANDARAMAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

1958-வது ஆண்டில் வடாற்காடு ஜில்லாவில் எங்கெங்கே சமுதாய அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : During the year 1958 the following five blocks were launched in the North Arcot district :—

(1) Tirupattur Block,

(2) Wallajah Block,